PRIMARY SCHOOL

SECOND SEMESTRAL ASSESSMENT - 2013

TAMIL LANGUAGE - PAPER 2

PRIMARY 4

---

Instructions :

(1) Do not open this booklet until you are told to do so.

(2) Follow the instructions given at the beginning of each section of the booklet.

(3) Answer all questions.

**Duration : 1 hour 15 minutes**

---

Name : ______________________________ (      )

Class : Primary 4 (        )

Date :

---

| Marks Obtained | Max. Marks |
|---|---|
|  |  |

Parent's Signature : ____________________

(I have checked and verified my child's marks)



**P4 SA2**

பெயர் : ____________________ வகுப்பு : 4 - ____

கீழ்க்காணும் படத்தொடரைப் அடிப்படையாகக் கொண்டு 70 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கதை எழுது. தரப்பட்டுள்ள துணைச்சொற்களை நீ கட்டுரை எழுதுவதற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

| | |
|---|---|
| பள்ளி முடிந்து | வீட்டில் ஓய்வு |
| பின்னால் வந்து | பள்ளிப் பாடங்களை |
| மோட்டார் சைக்கிள் | சில வாரங்களுக்குப் பின் |
| கடுமையான காயங்களுடன் | ஒன்றாகப் பள்ளிக்கு |
| மருத்துவமனையில் | புத்தகப் பையை |



தொடக்கப்பள்ளி

தமிழ்மொழி இறுதியாண்டு தேர்வு

நான்காம் வகுப்பு

பெயர் : ____________________ வகுப்பு : ____________

<u>வேற்றுமை உருபுகள்</u> (4)

<u>கீழ்க்காணும் பத்தியில் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கேற்ற பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்பினுள் எழுது.</u>

முத்து பிச்சையெடுத்து வாழ்ந்து வந்தான். அவன்' " கடவுளே! நீங்கள்தான் என் (1) ____________ போக்கவேண்டும்!" என்று வேண்டினான். கடவுளும் அவன் முன்னால் தோன்றி, " நான் (2) ____________ உதவுகிறேன். நீ உன் துணி முட்டையைத் திறந்து பார்," என்றார். முத்து அப்படியே செய்தான். என்ன ஆச்சரியம்! மூட்டையில் ஏராளமான தங்கக் காசுகள் இருந்தன.

முத்து கடவுளை வணங்கி நன்றி சொல்லிவிட்டுத் தன் (3) __________ திரும்பினான். அவன் அங்கு வாழ்ந்த ஏழைகள் அனைவரையும் கூவி அழைத்தான். அவர்கள் (4) ____________ குரலைக் கேட்டு ஓடோடி வந்தார்கள். முத்து தம்மிடமிருந்த தங்கக் காசுகளை அவர்களோடு பகிர்ந்து கொண்டான்.

Q1. (1) துன்பத்தை
(2) துன்பத்துடன்
(3) துன்பத்தால்
(4) துன்பத்தில் ( )

Q2. (1) உன்னை
(2) உனக்கு
(3) உன்னிடம்
(4) உன்னுடன் ( )

Q3. (1) குடிசையை
(2) குடிசையின்
(3) குடிசையில்
(4) குடிசைக்கு ( )

Q4. (1) முத்துவை
(2) முத்துவுக்கு
(3) முத்துவின்
(4) முத்துவிடம் ( )

. செய்யுள்/பழமொழி (5மதிப்பெண்கள்)

| |
|---|
| கீழ்க்காணும் செய்யுளை நிறைவு செய்வதற்கு ஏற்ற மிகச் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு, அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. |

5. ____________ சிறுமையும் தான் தர வருமே.

(1) பெருமையும் (3) மேன்மையும்
(2) வன்மையும் (4) மென்மையும் ( )

6. ஒன்றுபட்டால் உண்டு ____________.

(1) தாழ்வு (3) உயர்வு
(2) நன்மை (4) வாழ்வு (

7. எறும்பு ஊரக் ____________ தேயும்.

(1) பாறையும் (3) கல்லும்
(2) தரையும் (4) மணலும் ( )

8. மந்திரிக்கு அழகு வரும் பொருள் ____________.

(1) அறிவித்தல் (3) கூறுதல்
(2) சொல்லுதல் (4) உரைத்தல் ( )

9. இளமையில் ____________ முதுமையில் வறுமை.

(1) சோர்வு (3) களைப்பு
(2) சுறுசுறுப்பு (4) சோம்பல் ( )

<u>தெரிவுவிடைக் கருத்தறிதல்</u> (5 வினாக்கள் - 5 மதிப்பெண்கள்)
*கீழ்க்காணும் பகுதியைக் கவனமாகப் படி.*

அபிராமி தன் பெயருக்கு ஏற்ப மிக அழகான பெண். ஒரு செல்வக் குடும்பத்தில் பிறந்த ஒரே பெண் அவள். அவளது பெற்றோர் அவளிடம் மிகுந்த அன்பு வைத்திருந்தனர். தங்கள் கண்ணைப் போல் அவளைப் பேணிக் காத்து வந்தனர். அவள் கல்வியில் சிறந்து விளங்கினாள். அவள் தன் பள்ளியில் எல்லாப் பாடங்களிலும் முதல் மாணவியாகத் திகழ்ந்தாள். அவளுடைய நல்ல பண்புகள் எல்லாரையும் கவர்ந்தன. அவளுக்குப் பள்ளியில் தோழியர் பலர் இருந்தனர்.

அபிராமியின் வகுப்பில் மேனகா பயின்று வந்தாள். அவள் வறுமையான குடும்பத்தில் பிறந்தவள். பெரும்பாலும் கிழிந்து, ஒட்டுப்போட்ட ஆடைகளையே அவள் அணிந்து வருவாள். நல்ல உணவு இல்லாததால் அவள் எலும்பும் தோலுமாகக் காட்சி அளித்தாள். படிப்பிலும் அவள் பின்தங்கியே இருந்தாள். அதனால், அவளுக்குத் தோழர்களும் குறைவு.

ஆண்டு இறுதியில் பள்ளியில் பரிசளிப்பு விழா நடைபெற்றது. அபிராமி பல பரிசுகள் பெற்றுப் பெற்றோருக்குப் பெருமை தேடித் தந்தாள். மேனகா அந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டாள். அவள் ஒரு குழுப்பாடலில் பலரோடு ஒருத்தியாகப் பங்கெடுத்தாள். அவள் பெற்றோர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை! அந்நிகழ்ச்சி முடிவுற்றதும் மேனகாவின் அன்னை தம் மகளை அப்படியே அள்ளி அணைத்து முத்தமிட்டு மகிழ்ந்தார். அருகில் இருந்தவர்கள், *"காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சுதான்,"* என்று பேசிக்கொண்டார்கள்.

கீழ்க்காணும் வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன ஒவ்வொரு வினாவிற்கும் ஏற்ற மிகப்பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் எண்ணை அடைப்புக் குறிக்குள் எழுது. (5 ம.வெ)

10. அபிராமியின் சிறப்புகள் யாவை?

1. அவளுக்கு நண்பர்கள் சிலர் இருந்தனர்.
2. அவள் ஒரு பணக்காரரின் மகள்.
3. அவள் நற்பண்புகளிலும் கல்விக்கேள்விகளிலும் சிறந்தவள்.
4. அவள் விளையாட்டுப் போட்டிகளில் சிறந்தவள். ( )

11. பெற்றோர் அபிராமியை எவ்வாறு கவனித்துக்கொண்டனர்?

1. காவலன் அமைச்சனைக் காப்பது போல
2. கண்ணை இமை காப்பது போல
3. தாய்ப்பறவை தன் குஞ்சுகளைக் காப்பது போல
4. இராணுவத்தினர் நாட்டைக் காப்பது போல ( )

12. மேனகாவுக்கு நண்பர்கள் குறைவாக இருப்பதற்குக் காரணம் யாது?

1. அவள் தூய்மையுடன் இல்லாததால்
2. அவள் எப்போதும் புத்தாடைகள் அணிவதால்
3. அவள் நன்கு கல்வி கற்காததால்
4. அவள் குழுப்பாடகியாக இருந்ததால் ( )

13. ஏழைத் தாய் ஏன் மகிழ்ச்சி அடைந்தார்?

1. தம் மகள் பரிசு பெற்றதால்
2. தம் புதல்வி வெற்றி பெற்றதால்
3. தமது மகள் பல பாராட்டுகள் பெற்றதால்
4. தம் மகளும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டதால் ( )

14. *"காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு"* என்ற பழமொழியின் பொருள் என்ன?

1. காக்கையின் குஞ்சு பொன்னாக இருக்கும்
2. சிறந்தவர்கள் சிறப்பான பிள்ளைகளைப் பெறுவார்கள்.
3. சிறப்புக் குறைந்திருந்தாலும் பெற்றோர்கள் தம் பிள்ளைகளைப் பெருமையாகவே எண்ணுவர்.
4. நாம் காக்கையைப் போல் ஒற்றுமையாக வாழ வேண்டும்.


தோ பா யோ இந்திய நற்பணிக் குழு ஏற்பாட்டில்
தந்தையர் தினக் கொண்டாட்டம்

தேதி : 25 ஜூலை 2009
நாள் : சனிக்கிழமை
நேரம்: காலை மணி 9.00 மணி முதல்
பிற்பகல் 4.00 மணிவரை
இடம்: தோ பா யோ சமூக மன்றம்

குழு விளையாட்டு
(தந்தையும் 2 பிள்ளைகளும்
கொண்ட குழு)

பாட்டுப் போட்டி
(பெற்றோரும் 1 பிள்ளையும்
கொண்ட குழு)

கவிதைப் போட்டி
(தந்தையைப் பற்றி ஒரு கவிதை
எழுதுதல்)



அதிர்ஷ்டக் குலுக்கல் (Lucky Draw)
முதல் பரிசு : $1000
இரண்டாம் பரிசு : $750
மூன்றாம் பரிசு : $500
மற்றும் 50 பரிசுகள் காத்திருக்கின்றன.
ஆதரவாளர்கள் : மாலதி புத்தகக்கடை

சேகர் உணவகம் ஆதரவில் சைவ உணவு வழங்கப்படும்
தொடர்புக்கு : குமாரி வள்ளி
தொலைபேசி எண் : 99023432

கீழ்க்காணும் வினாக்கள் மேற்கண்ட பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் ஏற்ற பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக் குறிக்குள் எழுது (6 மதிப்பெண்கள்)

15. இந்த நிகழ்ச்சி எதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது?

1 இந்தியர் தினத்திற்காக
2. பெற்றோர் தினத்திற்காக
3. தந்தையர் தினத்திற்காக ( )

16. இந்த நிகழ்ச்சியின் ஏற்பாட்டாளர் யார்?

1. மாலதி புத்தகக்கடை
2. தோ பா யோ இந்திய நற்பணிக்குழு
3. சேகர் உணவகம் ( )

17. இந்த நிகழ்ச்சிக்கு மாலதி புத்தகக்கடையினர் என்ன வழங்குகின்றனர்?

1. ஆதரவு வழங்குகின்றனர்
2. உணவு வழங்குகின்றனர்
3. பரிசுகள் வழங்குகின்றனர் ( )

ஒலி வேறுபாட்டுச் சொற்கள்

வாக்கியங்களில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுது.

18. என் அம்மா நல்ல தைரியசாலி. ஆனால் __________ என்றால் மட்டும் அவருக்கு மிகவும் பயம்.

1. பல்லி 2. பள்ளி ( )

19. என் பாட்டி பேரம் பேசுவதில் கெட்டிக்காரர். எல்லா கடைக்காரர்களிடம் பொருட்களின் ________ குறைத்துக் கேட்பார்.

1. விலையை 2. விளையை ( )

20. மின்சாரத்தை மிச்சப்படுத்த வேண்டும். அதனால், தேவையில்லாத நேரத்தில் ___________ அணைத்துவிடு.

1. விலக்கை 2. விளக்கை ( )

21. எனக்குப் பசியாக இருந்தது. அதனால், நான் _________ அருந்தினேன்.

1. பால் 2. பாழ் ( )

22. முதலையின் _________ கடினமாக இருக்கும். அதைக் கொண்டு கைப்பைகள் தயாரிக்கின்றனர்.

1. தோல் 2. தோள் ( )

## முன்னுணர்வுக் கருத்தறிதல்

**கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகச் சரியான விடைகளைத் தேர்ந்தெடுத்து கோட்டில் எழுது. (5 மதிப்பெண்கள்)**

பாலன் மிகவும் நல்ல மனம் உள்ளவன். அவன் எப்போதும் பிறருக்கு உதவும் எண்ணம் கொண்டவன். அவன் ஆறாம் 23. ______________ படிக்கிறான். ஒரு நாள் இடைவேளை நேரம் வந்தது. பசியாக இருந்த மாணவர்கள் மகிழ்ச்சியுடன் 24. ______________ ஓடினார்கள். அப்போது பாலன் ஒரு சிறுவன் தனியாக நின்று அழுவதைப் பார்த்தான். அவனுக்கு அவனைப் பார்க்க 25. ________________ இருந்தது. பாலன் அவன் அருகில் சென்றான். சிறுவன் ஏன் அழுகிறான் என்ற 26. ________________ கேட்டான். அதற்கு அவன் தன்னுடைய பணப்பை 27. ______________ போய் விட்டதாகக் கூறினான். பாலன் உடனே அவனை ஆசிரியரிடம் அழைத்துச் சென்றான். ஆசிரியர் சிறுவனுக்குப் பணம் தந்தார். சிறுவன் இருவருக்கும் நன்றி கூறினான்.

| | | |
|---|---|---|
| காரணத்தை | கேள்வியை | உணவகத்துக்கு |
| காணாமல் | வேடிக்கையாக | பரிதாபமாக |
| திடலுக்கு | வகுப்பில் | விழுந்து |

சுயவிடைக் கருத்தறிதல் (10 மதிப்பெண்கள்)
கீழ்க்காணும் பகுதியை கவனமாகப் படிக்கவும்.

ஒரு நாள் நரி ஒன்று ஒரு காட்டுப்பூனையைச் சந்தித்தது. நரி, "பூனையே! எங்கே செல்கிறாய்?" என்று கேட்டது. "நாண் பக்கத்தில் உள்ள காட்டிற்குச் செல்கிறேன். இந்தக் காட்டில் வேட்டை நாய்களின் **தொல்லை** தாங்க முடியவில்லை," என்றது காட்டுப்பூனை.

"பூனையே! எனக்கும் இங்கு வாழப் பிடிக்கவில்லை. நானும் உன்னோடு வருகிறேன்", என்றது நரி. "நாம் செல்லும் வழியில் வேட்டை நாய்கள் உள்ளன. அவை நம்மைத் **துரத்தினால்** என்ன செய்வது?" என்று காட்டுப்பூனை கேட்டது. அதற்கு நரி, "அவற்றை ஏமாற்ற எனக்கு நூறு தந்திரங்கள் தெரியும்," என்று பெருமையுடன் கூறியது.

"நரியாரே! எனக்கு நிறைய தந்திரங்கள் தெரியாது. ஒன்றுதான் தெரியும்," என்றது காட்டுப்பூனை. அவை இரண்டும் சிறிது தூரம் நடந்ததும், வேட்டை நாய்களின் **ஒலி** கேட்டது. பூனை உடனே அருகில் இருந்த மரத்தில் **விரைவாக** ஏறியது. நரி எந்தத் தந்திரத்தைப் பயன்படுத்தித் தப்பிக்கலாம் என்று யோசித்துக் கொண்டு நின்றது. வேட்டை நாய்கள் அங்கு ஓடி வந்து நரியைக் கடித்துக் கொன்றன.

இதைக் கண்ட காட்டுப்பூனை, " இந்த நரிக்கு நூறு தந்திரங்கள் தெரிந்திருந்து என்ன பயன்? சரியான **நேரத்தில்** பயன்படுத்தி இருந்தால் உயிர் பிழைத்திருக்கும் ," என்று நினைத்துப் பரிதாபப்பட்டது.

விடை எழுது:

28. காட்டுப்பூனை ஏன் வேறு காட்டுக்குச் சென்று கொண்டிருந்தது?

29. நரி வேட்டை நாய்களிடமிருந்து தப்பிக்க எவற்றைப் பயன்படுத்தும்?

30. எதனால் காட்டுப் பூனை மரத்தில் ஏறியது?

31. எப்போது வேட்டை நாய்கள் நரியைக் கடித்துக் கொன்றன?

32. நரி என்ன செய்திருந்தால் உயிர் பிழைத்திருக்கும்?

சொற்பொருள்:

கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடுத்து கோட்டினுள் எழுதவும். (5 மதிப்பெண்கள்)

33. தொல்லை - ______________________

34. துரத்தினால் - ______________________

35. ஒலி - ______________________

36. விரைவாக - ______________________

37. நேரத்தில் - ______________________

| | |
|---|---|
| 1. சத்தம் | 6. பிடித்தால் |
| 2. துன்பம் | 7. நாளில் |
| 3. சமயத்தில் | 8. வேகமாக |
| 4. கடுமையாக | 9. தொந்தரவு |
| 5. விரட்டினால் | 10. குரல் |

# P4
## Primary TESTPAPER 14

முத்து பிச்சையெடுத்து வாழ்ந்து..........

1. 1 2. 2 3. 4 4. 3

5. 1 6. 4 7. 3 8. 4 9. 4

10. 3 11. 2 12. 3 13. 4 14. 3

15. 3 16. 2 17. 1

18. 1 19. 1 20. 2 21. 1 22. 1

23. வகுப்பில் 24. உணவகத்துக்கு 25. பரிதாபமாக 26. கேள்வியை
27. காணாமல்

28. வேட்டை நாய்களின் தொல்லைத் தாங்க முடியாததால் காட்டுப்பூனை வேறு காட்டுக்குச் சென்று கொண்டிருந்தது.

29. நரி வேட்டை நாய்களிடமிருந்து தப்பிக்க தனக்குத் தெரியும் தந்திரங்களைப் பயன்படுத்தும்.

30. வேட்டை நாய்களின் ஒலி கேட்டதால் காட்டுப் பூனை மரத்தில் ஏறியது.

31. நரி எந்தத் தந்திரத்தைப் பயன்படுத்தித் தப்பிக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தபோது வேட்டை ந்ய்கள் அதைக் கடித்துக் கொன்றன.

32. நரி தன்க்குத் தெரிந்த நூறு தந்திரங்களுள் ஒன்றையாவது சரியான நேரத்தில் பயன்படுத்தியிருந்தால் அது உயிர் பிழைத்திருக்கும்.

சொற்பொருள்

33. தொந்தரவு 34. விரட்டினால் 35. சத்தம் 36. வேகமாக

37. சமயத்தில்